## வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் - 2015

வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 5 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213 ''அ'' பிரிவு மற்றும் 237 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2005 ஏப்ரல் 04 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 911,785 கிரயமுடைய சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களை மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 79,109 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | கணக்குகள்/ கொடுப்பனவு உறுதிச்சீட்டு/ உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காப்புறுதி வருமானம் | 3,238,013 | மூன்றாம் தரப்பினரின் உரித்து தொடர்பான உறுதிப்படுத்தல் |
| (ஆ) | பயிற்சி நிகழ்ச்சித்திட்ட செலவினம் | 20,000 | விரிவுரை நடாத்தப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் |
| (இ) | வட்டி வருமானம் | 85,808 | விரிவான பட்டோலை |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மன்றம் வருமான வரிகளிலிருந்து விலக்களிக்கப்படாமையினால் வருமான வரிக்காக பதிவுசெய்து வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 139 | உறுதிச்சீட்டுக்களுக்கு பணம் செலுத்தும் போது ஒவ்வொரு உறுதிச்சீட்டுக்களும் உறுதிப்படுத்துவதற்காக அதிகாரம் பெற்ற நபரிடம் உறுதிப்படுத்துதல் மற்றும் பெறுபவரின் உரித்தை உறுதிப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 1,064,731 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப்பிரமாணம் 751 மற்றும் 752(1) | அரசாங்க நிறுவனங்களுக்குக் கிடைக்கின்ற மற்றும் விநியோகிக்கப்படுகின்ற சகல பொருட்களும் பொருட்பதிவேட்டிலும் இருப்புப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மன்றத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 204,436 பெறுமதியான பொருட் பெறுவனவுகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி மன்றத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 24,476,981 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் 04 மாதங்களில் மன்றத்தின் தலைவருக்கு போக்குவரத்துப் படியாக ரூபா 40,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2015 யூன் 17 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | • சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக தலைவருக்கு 2015 ஆம் ஆண்டில் 06 மாதங்களின் போது ரூபா 30,000 கூட்டுத்தொகை பங்குபற்றல் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.<br>• மன்ற அங்கத்தவர்களுக்கு ஒரு மன்றக் கூட்டத்திற்காக ரூபா 4,000 படியொன்று மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், கூட்டமொன்றிற்காக ரூபா 5,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் 15 அங்கத்தவர்களுக்கு 2015 சனவரி முதல் யூன் வரை ரூபா 50,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br>• பங்குபற்றல் படிக்காக மன்ற அங்கத்தவர்களும் அவதானிப்பாளர்களும் தகைமைபெற்றிருந்த போதிலும், மன்றத்தின் அங்கத்தவரல்லாத மன்றத்தின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பங்குபற்றல் படியாக ரூபா 243,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2014 நவம்பர் 17 ஆந் திகதிய 22/99 (xxx) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் திறைசேரியின் அல்லது அரச நிர்வாக அமைச்சின் எழுத்துமூல அங்கீகாரமின்றி மன்றத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தரின் பிரத்தியோக வாகனமொன்றை மன்றத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அதற்காக ரூபா 139,635 தொகையான எரிபொருள் பட்டியல் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 3,074,244 கிரயமுடைய நிலையான சொத்துக்களுக்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2014 யூன் 27 ஆந் திகதிய பீடீ/ஐபீ/117/1/10/14 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் கடிதம் | கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது அதிவேக வீதிகளைப் பயன்படுத்தி ரூபா 11,100 தொகையான பட்டியல்கள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2015 மார்ச் 27 ஆந் திகதிய ஈஎஸ்ரீ/8/ஏஎல்ஓடபிள்யூஎன்/05/01/02 ஆம் இலக்க அரச நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் நல்லாளுகை தொடர்பான அமைச்சின் தாபனப் பணிப்பாளரின் கடிதம் | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 09 தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக திறைசேரி அங்கீகாரமின்றி வளப்பங்களிப்பு படியாக ரூபா 525,000 செலுத்தப்பட்டிருந்தது. |

**2.4 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மன்றத்தின் மொத்த தேறிய சொத்துக்களிலிருந்து 89.4 சதவீதம் திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் 83.5 சதவீதமாக இருந்தது. மன்றத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதைவிட நிதியத்தை முதலீடு செய்து நிதியை உழைப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தமை இதன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 25,678,296 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,647,004 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,968,708 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காப்புறுதி வருமானப் பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 5,741,131 இனால் அதிகரித்திருந்த போதிலும், வருடாந்த செலவினம் ரூபா 7,805,702 இனால் உயர்வடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய மூன்று ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது நிறுவனத்தில் தொடர்ச்சியாக நிதி மிகை காணப்பட்ட போதிலும் அது வருடாந்தம் தளம்பலடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது மன்றத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தளம்பலடைந்து காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டின் போது மாத்திரம் பங்களிப்பு 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பங்களிப்பில் கவனத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்று அவதானிக்கப்படாதிருந்ததுடன் அதனை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 இன் 05 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213(அ) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தது.

- வாகனங்களின் அளவு, அவற்றின் மாதிரி, வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக முறைமையொன்றைப் பேணிச்செல்லல் மற்றும் வீதிப் பாதுகாப்பு விடயம் தொடர்பாக நூலகமொன்றை பராமரித்துச்செல்லல்

- தொடர்புடைய விடயங்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல், களப் பரிசோதனைகளை மேற்கொள்ளல். ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அந்த ஆராய்ச்சிகளுக்கு உதவியளித்தல்.

- ஒத்த சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அனுபவங்கள் குறித்த அறிவினை பரிமாறிக் கொள்ளல்.

* வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய விடயங்களுக்கான செயற்திட்டங்கள் தொடர்பில் அறிவினையும் தகவல்களையும் வழங்குதல், வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

* அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளை ஒருங்கிணைத்தல்.

* இணங்காணப்படாத வாகனங்களிலிருந்து விபத்துக்குட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துதல் மற்றும் வீதிப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக நிதி மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனம் தாபிக்கப்பட்டு அண்ணளவாக 10 வருடங்கள் கடந்திருந்த போதும் நிறுவனத்தினால் இந்த நோக்கங்களுக்கிடையே இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து விபத்திற்குள்ளாகும் நபர்களுக்கு நட்டஈடு செலுத்துதல் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்ற 02 பணிகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூலை 15 ஆந் திகதி முதல் யூலை 17 ஆந் திகதி வரை மொனராகலை மாவட்டத்தில் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் இரத்துச் செய்யப்பட்டமையினால் அதற்காக பத்திரிகையில் அறிவித்தல்களைப் பிரசுரித்தமைக்காகவும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு முன்னரும் ஏற்பட்ட ரூபா 787,573 கூட்டுத்தொகையான செலவினம் மேலதிக செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த 13 உப செயற்திட்டங்களில் ரூபா 10,000,000 தொகையான மதிப்பீட்டுக் கிரயமான 05 உப செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் மாத இறுதி வரையிலும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 10.000,000 தொகையான செயற்திட்டமொன்று 25 சதவீத முன்னேற்றத்தை மாத்திரம் அடைந்திருந்தது.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்றாம் தரப்பினர் காப்புறுதிக் கட்டணங்களின் மூலம் வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்புப் பணத்திலிருந்து இனங்காணப்படாத விபத்துக்களிலிருந்து ஏற்படுகின்ற மரணம் மற்றும் காயங்களுக்குச் செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுப் பணத்தையும் உள்ளடக்கிய மொத்தச் செலவினம் 2014 ஆம் ஆண்டின் போது 28.2 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் போது அது 42.1 சதவீதம் வரை உயர்வடைந்து சென்றிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு வரை கிடைத்த 430 மொத்த விண்ணப்பங்களில் 70 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு 219 இற்காக இழப்பீடு செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் இழப்பீடு செலுத்த வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 141 ஆக இருந்தது. இதில் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கிடைத்த 50 விண்ணப்பங்களுக்காக விண்ணப்பம் கிடைத்து 06 மாதம் முதல் 02 வருட கால தாமதத்தின் பின்னர் ரூபா 4,525,000 இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சரியான திட்டமின்றி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 498,500 தொகையான முற்பணத்தில் ரூபா 220,862 தொகை எஞ்சியிருந்ததுடன் அது வழங்கப்பட்ட முற்பணத்தில் 34 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய அமப/10/1883/445/051 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் திறைசேரியின் அடிப்படையில் மேலதிக செலவினப் பொறுப்பற்ற வகையில் ஆகக்குறைந்த கிரயத்தில் தேசிய வீதிப் பாதுகாப்பு ஆணைக்குழு போக்குவரத்து அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட அதன் உள்ளடக்கம், கட்டமைப்பு மற்றும் பணிப்பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டு புதிய அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த மன்றம் மீளாய்வாண்டின் இறுதியளவில் உருவாக்கப்பட்டு 10 வருடங்களுக்கு அண்ணளவான காலம் கடந்திருந்த போதிலும், பொதுத்திறைசேரியின் நிரந்தர பதவியணியினருக்கான அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சின் பதவியணியினை வரவழைத்து கடமைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

**4.4 சமூகப் பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 56,392 உயிரிழப்பு விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் விபத்துக்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினை விட 10.5 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. மேலும் அந்த விபத்துக்களிலிருந்து இனங்காணப்படாத விபத்துக்கள் எவ்வளவு என கண்டறிவதற்காக உரிய திட்டமொன்று மன்றத்திடம் காணப்படவில்லை. இதன் பிரகாரம் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் மன்றத்தின் நோக்கம் மற்றும் பணிகளை போதியளவான பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு தெளிவுபடுத்தும் 5 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 469,687 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் முச்சக்கர வண்டியின் மூலம் ஏற்பட்ட உயிரிழப்பு விபத்துக்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களில் 131 ஆகவும், 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களில் 177 விபத்துக்கள் ஆனமையால் விபத்துக்களின் அளவு 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் மன்றத்தின் செலவினத்துடன் ஒப்பிடும் போது எதிர்பார்த்த சமூக நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தைப் பரீட்சித்த போது, அது பணிப்பாளர் சபையாலும் செயலாளரினாலும் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் பின்னர் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மன்றத்தை வலுப்படுத்தும் சந்தர்ப்பம், இடையூறுகள் மற்றும் நலிவுகளை இனங்கண்டு அது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

(ஆ) வியாபார ரீதியான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான தந்திரோபாயங்களை (Strategies) இனங்காணல்.

(இ) காலரீதியில் அடைய வேண்டிய இலக்குகளை (Targets) தாபித்தல் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொறுப்புக்களை செயற்பாட்டு மட்டம் வரை தர்க்கரீதியில் பகிர்ந்தளித்தல்.

**5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிதி, திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2014 ஆம் இலக்கத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையினால் செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்கள் தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 26,600,000 செலவினங்களை தெளிவாக பிரித்து இனங்காண முடியாதிருந்தது.

**5.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 5,400,000 தொகையான இனங்காணப்பட்ட மூலதனச் செலவினங்களுக்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

மன்றத்தின் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக மன்றத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | அங்கீகாரமின்றி நாட்குறிப்புப் பதிவுகளை இடல். |
| (ஆ) | வருமான நிர்வாகம் | சகல காப்புறுதிக் கம்பனிகளிலும் மூன்றாம் தரப்பினர் மோட்டார் வாகனக் காப்புறுதி கட்டணங்களுக்குரிய பங்களிப்புப் பணம் சேகரிப்பதற்காக முறையான தரவு முறையொன்றைப் பேணாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | நட்டஈடு செலுத்துதல் | நட்டஈடு செலுத்துதலில் காலதாமதம் ஏற்படுகின்றமை. |
| (ஈ) | திட்டமிடலும் பாதீட்டுக் கட்டுப்பாடும் | கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டைத் தயாரிக்கும் போது நிறுவனம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடையும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | நிதிக்கட்டுப்பாடு | எல்லைகளுக்குட்பட்டு முற்பணம் வழங்கப்படாமை. |